# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.856/F/2024 (SA.9073/F/2022)

திரு S. வெங்கடாசலம் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் - 637 211. — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 10.12.2021 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 24.02.2022 & 01.04.2022 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.04.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.05.2022 |
| ஆணையத்தின் Preliminary Notice அனுப்பப்பட்ட நாள் | 12.07.2022 |
| மனுதாரரின் நினைவூட்டு கடித நாள் | 09.09.2022 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 21.06.2024 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 27.11.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S. வெங்கடாசலம் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ப. தமிழரசி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருச்செங்கோடு வட்டம், மங்களம் கிராமம் புல எண்கள்.242/1,2,3 ஆகியவற்றின் அளவுகளை அளந்து பத்திரம் மற்றும் பட்டாவில் உள்ளவாறு புலப்படத்தில் திருத்தம் செய்து புஸ்திதிலும் அதற்கு ஏற்ப சரியான அளவிற்கு எல்லைக்கற்கள் நட்டுத்தரக்கோரி கடந்த 04.11.2019 அன்று தன்னால் கொடுக்கப்பட்ட மனுவின் நகல், மேற்படி மனு தொடர்பாக விசாரணை செய்யப்பட்டவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் நகல்கள், தங்கள் அலுவலகக்கோப்பு ந.க.எண்.3324/2020 நாள் 23.12.2020 தொடர்பான ஆவணங்களின் நகல்கள் மற்றும் இது தொடர்பான இறுதி தீர்ப்பின் நகல், மங்களம் கிராம புல எண்கள்.242/1,2,3 ஆகியவற்றை கடந்த 17.11.2020 அன்று மல்லசமுத்திரம் சார்ஆய்வாளர் மற்றும் மங்களம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் மேற்படி புலத்தை தணிக்கை செய்து அளவுப்பணி மேற்கொண்டு வருவாய் கோட்டாட்சியரிடம் சமர்பித்த ஆவணங்களின் நகல்கள், ந.க.எண்.3324/2020 நாள் 23.12.2020 தொடர்பான அனைத்து ஆவணங்களின் நகல்கள் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.9073/F/2022) 21.06.2024 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***" 4. அன்றைய (21.06.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து*** **வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் அவர்கள் (1) வட்டசார் ஆய்வாளர் / பொதுத் தகவல் அலுவலர், வட்ட அலுவலகம், திருச்செங்கோடு நாமக்கல் மாவட்டம், (2) வட்ட துணை ஆய்வாளர் / மேல்முறையீட்டு அலுவலர், வட்ட அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் மற்றும் (3) மனுதாரர் ஆகியோர்களிடம் உரிய விசாரணை மேற்கொண்டு, அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் நகலினை** ***மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு அறிக்கையினை அனுப்பிவைத்து, மனுதாரர் அவற்றை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் நகல்கள் ஆகியவற்றை இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு நாமக்கல் மாவட்டம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது".***

4. இந்நிலையில், இவ்வாணையத்தால் 21.06.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை நாளதுவரையில் தனக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 27.11.2024 தேதியிட்டு

இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (16.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் திருச்செங்கோடு வட்டம், மங்கலம் கிராம புல எண்.242/1, 2, 3 ஆகியவற்றினை அளந்து பத்திரம் மற்றும் பட்டாவில் உள்ளவாறு புலப்படத்தில் திருத்தம்செய்து பூஸ்திதிலும் அதற்கு ஏற்ப சரியான அளவிற்கு எல்லைக் கற்கள் நட்டுத்தரக்கோரியுள்ளார் என்றும் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் அவ்வறிக்கை குறித்த நகலினை மனுதாரருக்கு வழங்கப்படும் என்றும் இதற்கு சிறிது காலஅவகாசம் வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

*7. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள திருச்செங்கோடு வட்டம், மங்கலம் கிராம புல எண்.242/1, 2, 3 ஆகியவற்றினை அளந்து பத்திரம் மற்றும் பட்டாவில் உள்ளவாறு புலப்படத்தில் திருத்தம்செய்து பூஸ்திதிலும் அதற்கு ஏற்ப சரியான அளவிற்கு எல்லைக் கற்கள் நட்டுத்தருவது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு அது குறித்த அறிக்கையின் நகலினை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மேலும், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு நாளதுவரையில் தகவல்கள் வழங்காத காரணத்தினால் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம், நிலஅளவை பிரிவு, வட்டசார் ஆய்வாளர் / பொதுத் தகவல் அலுவலர் திரு ஈ. பசவராஜ் என்பவரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற 21 நாட்களுக்குள் அவரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வருவாய்*

*கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.*

**ஓம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.856/F/2024 (SA.9073/F/2022)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் - 637 211.

**<u>வழக்கு எண்.NC.856/F/2024 (SA.9073/F/2022)</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
வட்டசார் ஆய்வாளர், நிலஅளவை பிரிவு,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் - 637 211.

**<u>வழக்கு எண்.NC.856/F/2024 (SA.9073/F/2022)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. வெங்கடாசலம், த/பெ. (லேட்) சோமசுந்தரம்,
எண்.6/43, கருக்கங்காடு, மங்களம் கிராமம்,
மங்களம் புதூர், மங்களம் (அஞ்சல்),
திருச்செங்கோடு (தாலுகா),
நாமக்கல் மாவட்டம் - 637 501.

Copy to: File.
SNPS / 22.04.2025